26.06.2025



**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.253/2011</u>**

**<u>வா.சா. 1–தங்கராசு, த/பெ.கருப்பண்ணன்</u>**

**<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பழைய சர்வே எண்.293/3 ல் உள்ள தாவா கிணறு எனக்கும், என்னுடைய சகோதரர் ஆனந்தன் மற்றும் பிரதிவாதிகள் ஆறு நபர்கள் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். பழைய சர்வே எண்.293/3 கட்டுப்பட்ட நிலம் மொத்தம் 41 செண்ட் நிலம் என்று சொன்னால் சரிதான். இந்த பழைய சர்வே எண்.293/3 ல் உள்ள 41 செண்ட் நிலத்தை தங்கராசும், 1 ம் பிரதிவாதி காளங்கியம்மாளும் கிரையம் வாங்கிய சொத்து என்று சொன்னால் சரிதான். பழைய சர்வே எண்.293/3 என்ற இந்த சர்வே எண்ணை தான் மூன்று உட்பிரிவுகளாக சர்வே எண்.293/3 எ, சர்வே எண்.293/3 பி, சர்வே எண்.293/3 சி ஆகிய எண்களாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.293/3 சி நிலத்தில் தான் தாவா கிணறு, கிணற்றுமேடு ஆகியவை வைத்து நானும், பிரதிவாதியும் பயன்படுத்தி வருகிறோம் என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.293/3 சி வடபுறத்தில் உள்ள சர்வே எண்.293/3 பி

கட்டுப்பட்ட நிலங்கள் வாதி மற்றும் வாதியின் சகோதரர் ஆனந்தன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.293/3 பி கட்டுப்பட்ட நிலங்கள் பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, எங்களுக்கும் கூட்டாக பாத்தியப்பட்டது. சர்வே எண்.293/3 எ தார்ரோட்டை ஒட்டி அமைந்துள்ள நிலங்கள் எனக்கும், ஆனந்தனுக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். நானும், ஆனந்தனும் சர்வே எண்.293/3 சி கிணற்றிலிருந்து சர்வே எண்.293/3 பி மற்றும் சர்வே எண்.293/3 எ வரை சென்றடையலாம் என்று சொன்னால் சரியல்ல. 60 ஆண்டுகாலமாக கிணற்றிலிருந்து தெற்கு சென்று கிழக்கு பக்கம் சென்று தான் பயன்படுத்தி வந்தோம் என்று சொன்னால் சரியல்ல, நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சர்வே எண்.293/3 சி கிணற்றிலிருந்து சர்வே எண்.293/3 பி மற்றும் சர்வே எண்.293/3 எ வரை நிலம் வழியாக சென்று வாரியில் இறங்கி ரோட்டை அடைந்து தார்ரோட்டில் மேல்புறமாக சென்று பின்பு தென்புறம் சென்று விவசாயம் செய்து வந்தேன், பைப்லைனும் இதே திசையில் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 தோராய வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள எ, பி என இரண்டு புள்ளிகள் வழியாக தான் பாதையாகவும்,

பைப்லைன் கொண்டு சென்றுள்ளேன் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எ, பி புள்ளிகள் வழியாக பாதை என உள்ளது, சர்வே எண்.293/3 சி– லிருந்து தொடங்கி சர்வே எண்.293/2 நிலத்திற்கு மேல்புறம் வரை பாதை அமைந்துள்ளதாக காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.293/2 உள்ள நிலம் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்படாத மூன்றாம் தரப்பினர் நிலம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சர்வே எண்.293/1 பி–ல் பாதை எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வரப்பு 2 அடி அகலத்தில் உள்ளது. நான் தாக்கல் செய்த வழக்குரையில் பத்தி 13 ல் சர்வே எண்.293/1 எ மற்றும் சர்வே எண்.293/1 பி–க்கு தென்புறம் உள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டபடி எ, பி புள்ளிகளில் உள்ள வரப்பில் அகலம் 4 அடி என குறிப்பிட்டுள்ளது தவறு என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சி, டி புள்ளிகள் வழியாக என்னுடைய வீட்டிற்கு செல்லலாம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சி, டி புள்ளிகளாக காட்டப்பட்டுள்ள நிலத்திற்கு வடபுறத்தில் தான் கிழமேல் தார்சாலை அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள

26.06.2025



வழக்குரை பத்தி 13 ல் எனக்கும், என்னுடைய சகோதரருக்கும் வீடு மற்றும் நிலங்களுக்கு சென்றடைய பாதை இல்லை என தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்ற சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை பத்தி 14 ல் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள எ, பி வரப்பின் மூலமாக பொதுகிணற்றை அடைய தடநடை பாதையாக புழக்கம் செய்ய உரிமை உண்டு என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்குரையில் சர்வே எண்.293/1 பி-ல் நிலங்களில் பிவிசி குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சியதை பிரதிவாதிகள் சேதம் செய்ததாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.293/1 பி-ல் சேதம் அடைந்த பைப்களை நான் சரிசெய்து விட்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் பார்வையிடும் போது சர்வே எண்.293/3 சி-ல் உள்ள பொதுகிணற்றில் சம்மந்தப்பட்ட மோட்டார் அறையை திறந்து மோட்டாரை இயக்கி காட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.293/1 பி உள்ள நிலங்களில் பைப்லைன் அமைக்கப்படவேயில்லை, நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு சர்வே எண்.293/1 பி-ல் நான் பைப்லைன்அமைத்திருந்தால், அதனை பறித்து நீதிமன்ற

வழக்கறிஞர் ஆணையரிடம் காண்பித்திருப்பேன் என்று சொன்னால் நான் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரிடம் சர்வே எண்.293/1பி–ல் அமைந்துள்ள பைப்லைனை பறித்து காண்பித்தேன். தற்போதும் அப்படி தான் அமைந்துள்ளது. நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையரின் மாதிரி வரைபடத்தில் ஆனந்தன் நிலத்தில் தென்புற கோடியில் கிழமேலாக பாதை அமைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளது என்றால் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்குரையில் சர்வே எண்.294/1எ நிலமானது எனக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் எனக்கு சர்வே எண் எல்லாம் தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த வழக்குரையில் படித்து பார்த்த பிறகு தான் கையொப்பம் செய்தேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் பத்தி எண்.11ல் எனக்கு பாத்தியப்பட்டதாக சர்வே எண்.294/2பி–ல் மேல்புறம் 8 ½ செண்ட் மற்றும் சர்வே எண்.294/1எ கீழ்புறம் 66 ½ செண்ட் நிலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள நிலம் எந்த நிலம் என்று எனக்கு தெரியவில்லை. நீ.ம.சா.ஆ.1 வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் தாவா கிணற்றில் சென்றடைய வாதி, பிரதிவாதிகள் பயன்படுத்திய பாதையாக எந்த பகுதி என குறிப்பிடவில்லை

என்று சொன்னால் சரியல்ல, அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும்போது பிரதிவாதிகள் யாரும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் சி, டி புள்ளிகளுக்கு இடையே வரப்புகளின் அகலம் 5 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், வரப்பை ஒட்டி நீர்வாய்க்கால் உள்ளது. இந்த சி, டி புள்ளிகள் வழியாக உள்ள 5 அடி வரப்பு பாதையாக உள்ளது, அது என்னுடைய நிலத்திற்கு முன்னாடி முடிந்துவிட்டது, என்னுடைய நிலத்தில் காணப்படவில்லை என நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 தோராய வரைபடத்தில் எ, பி புள்ளிகள் வழியாக பாதையாக உள்ள சொல்லியுள்ள சங்கதி பொய் என்று சொன்னால் சரியல்ல. (மதிய உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

(மதிய உணவு இடைவேளை முடிந்து சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடரப்படுகிறது.)

தாவா சொத்து சர்வே எண்.294/2-ல் ஆழ்துளை கிணறு அமைத்துள்ளீர்களா என்றால் வீட்டிற்காக ஆழ்துளை கிணறு அமைத்துள்ளேன். வழக்கு சொத்தில்

26.06.2025



விவசாயம் செய்து கொண்டு இருக்கிறேன் என்றால் தண்ணீர் குழாயை உடைத்துவிட்டதால் நான் தற்போது விவசாயம் செய்யவில்லை, நான் தவறாக சொல்கிறேன் தற்போது நான் விவசாயம் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள ஆழ்துளை கிணற்று வழியாக தான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.294/2பி உள்ள போரின் மூலமாக பைப்லைன் பேட்டு தாவா சொத்து முழுவதும் விவசாயம் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல, வீட்டிற்கு மட்டும் தான் தண்ணீர் எடுத்து கொண்டேன். தாவா சொத்தில் நான் தொட்டி கட்டி தண்ணீர் இறைத்து விவசாயம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சர்வே எண்.293/3சி உள்ள கிணற்றில் எனக்கும், என்னுடைய சகோதரர் ஆனந்தனுக்கும் உரிமையுண்டு என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கில் என்னுடைய சகோதரர் அந்த ஆனந்தனை தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான், ஆனால் அவர் என் தம்பி நான் தான் அவருக்கு சொத்து பிரித்து கொடுத்தேன்.

26.06.2025



ஆனந்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து நானும், ஆனந்தனும் பாய்ச்சிக்கொண்டு வருகிறோம்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.T.அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.